தேவனின் அன்பு ஊழியங்கள்

# மங்கள வார்த்தை

<< GOD'S LOVE MINISTRIES - VOL - II (ISSUE-2) - மாத இதழ் - பிப்ரவரி 2021 >>



# தடைகளை தகர்க்கிறவர்

## உங்கள் முன் செல்கிறார்!

# இ-பத்திரிக்கை உள்ளே.......


**மனம்திறந்து சில வார்த்தைகள்...** 03
Bro. T. Stephen, Founder, God's Love Ministries

**இம்மாத மங்கள வார்த்தை: தடைகளை உடைக்கிறவர் உங்கள் முன் செல்கிறார்!** 04
Bro. T. Stephen, Founder, God's Love Ministries

**"அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" - புதுவருட வாக்குத்தத்த ஆராதனை 2021** 10
Sis. Josephin Stephen, Editor "Mangala Vaarthai"

**பெண்கள் பகுதி: ஆண்டவரை தேடினால்...!** 13
Sis. Josephin Stephen, Editor, "Mangala Vaarthai"

**வேத வினா போட்டி** 16
Bible Quiz - (Sis. Josephin Stephen, Editor, "Mangala Vaarthai")

**ஆண்டவரின் அற்புதங்கள்** 17
(Testimonies)

**மார்வெல் திருமண தகவல் மையம்** 20
(Marvel Matrimony)

**சிறுவர்கள் பகுதி/குட்டீஸ் ஸ்பெஷல்: மனம் மாற விரும்புகிறாயா?** 21
(Children's Special) - Sis. Steffy Stephen, God's Love Ministries, Chennai

**வாலிபர் பகுதி: வாலிபனே ஆண்டவரில் பெலன் கொள்!** 23
(Youth Special) - Sis. Bavya Deril, God's Love Ministries, Chennai

**தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்** 26
(Schedule of TV Ministry)

**எங்கள் சேவைகள்** 29
(Our Services)



# மனம் திறந்து
## சில வார்த்தைகள்...

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

ஆண்டவரும், உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்கள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்!

புதிய வருடத்தில், இரண்டாம் மாதத்திற்குள் வந்துள்ள நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் நல்ல சுகபெலத்தோடு இருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். ஆம், "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால், நான் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை" (சங்கீதம் 16:8) என்ற நம்பிக்கையோடு இந்த புதிய மாதத்திற்குள் பிரவேசிப்போம்! ஆண்டவருக்கு நன்றிசெலுத்துவோம்!

வேதம் சொல்லுகிறது, இரண்டாம் மாதம், 2-ஆம் தேதி, சாலொமோன், எருசலேம் நகரில், ஆண்டவர் தாவீக்கு காண்பித்த இடத்தில், அவருடைய திட்டத்தின்படி தேவ ஆலயத்தைக் கட்ட அஸ்திபாரம் போட்டான் (2 நாளாகமம் 3:1,2). தொடர்ந்து சாலோமோனுக்கு சகல காரியங்களிலும் ஆண்டவர் துணை நின்று, தேவாலயத்தைக் கட்டி முடிக்க கிருபை செய்தார்! அந்த ஆண்டவர் தாமே இந்த இரண்டாம் மாதத்தில், உங்களோடு இருந்து, தடைகளை உடைத்து, உங்களுக்கு முன் சென்று, உங்கள் குடும்ப வாழ்வில், பிள்ளைகளுடைய வாழ்வில், படிப்பில், வேலையில், உங்கள் தொழிலில் பெரிய காரியங்களைச் செய்வாராக! நீங்கள் கையிட்டுச் செய்கிற காரியங்களில், புதிய புதிய திட்டங்களை (New Project) உங்களுக்குக் கொடுத்து, புதிய பரிமாணத்திற்குள் (New Dimension) உங்களை கொண்டுசெல்வாராக!

ஒருவேளை நீங்கள் கொரோனாவின் 2-ஆம் அலையை கண்டு பயந்துகொண்டிருக்கலாம். இந்த 2-ஆம் மாதத்தில் ஆண்டவர், அவைகளையெல்லாம் முறியடித்து, தீங்கு உங்களையும், உங்கள் குடும்பத்தையும் அணுகாதவண்ணம், தம்முடைய செட்டைகளின் நிழலில் வைத்துப் பாதுகாக்கும்படி நான் கண்ணீரோடு ஜெபித்துள்ளேன். **"இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை. கர்த்தர் உன்னைக் காக்கிறவர் கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை (சங்கீதம் 121:4-6)** என்ற வேத வசனங்களின்படி ஆண்டவருடைய கிருபையும், வழிநடத்துதலும், பாதுகாப்பும் இந்த மாதம் முழுவதும் உங்களோடும், உங்கள் குடும்பத்தினரோடும் இருப்பதாக! ஆமென்

கிறிஸ்துவின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

**(T. Stephen)**

நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்



இம்மாத மங்கள வார்த்தை

# தடைகளை தகர்க்கிறவர்

## உங்கள் முன் செல்கிறார்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர சகோதரிகளே,

நம்மை சிருஷ்டித்தவரும், நம்மை உண்டாக்கினவரும், நம்மை ஒருபோதும் மறந்து போகாதவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

இந்த நாளிலும் பிப்ரவரி மாத பரலோக மங்கள வார்த்தையோடு உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மங்கள வார்த்தையை வாசிக்கும்போது பிசாசினால் குருடாக்கப்பட்ட உங்கள் மனக்கண்கள் திறக்கப்படும். ஆவியிலே அனலாக மாறுவீர்கள். உங்கள் தனிப்பட்ட வாழ்விலுள்ள, குடும்ப வாழ்விலுள்ள, பிள்ளைகள் வாழ்விலுள்ள கட்டுகள் தானாக அறுக்கப்படும்! இருள் நீங்கி, உங்கள் வாழ்வில் ஒளி பிரகாசிக்கும்! நீங்கள் கிறிஸ்துவின் சாயலை தரித்துக்கொண்டு, புதிய புதிய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்வீர்கள். ஆகவே விசுவாசத்தோடு வாசியுங்கள். அற்புதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.

ஆண்டவர் இந்த புதிய மாதத்தில் உங்கள் வாழ்விலுள்ள தடைகளையெல்லாம் நீக்கி, உங்களை ஆசீர்வதிக்கப் போகிறார். உங்களுக்காக நான் ஆண்டவருடைய சமூகத்திலே காத்திருந்தபோது அவர் கொடுத்த மங்கள வார்த்தை:

**"தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார் அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள் அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப்போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்" (மீகா 2:13).**

மீகா தீர்க்கதரிசி ஆண்டவருக்கு "தடைகளை நீக்கிப்போடுகிறவர்" என்று ஒரு நல்ல பெயரை வைத்துள்ளார். ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு பாலும், தேனும் ஓடுகிற நலமும், விசாலமுமான கானான் தேசத்திற்கு நேராக அழைத்து வரும்போது, இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்னால், செங்கடல் கடக்க முடியாதபடி இருந்தது. மோசே தன் கையிலிருந்த கோலை

நீட்டியபோது, செங்கடல் இரண்டாகப் பிளந்து, இஸ்ரவேல் ஜனங்களுக்கு வழிவிட்டது. எகிப்தின் ராணுவமும், பெரிய சேனைகளும், இஸ்ரவேல் ஜனங்களை பின்தொடர்ந்தது. உடனே இஸ்ரவேல் ஜனங்கள் ஆண்டவரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார்கள்.



**"அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார் அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது" (யாத். 14:19).**

என்ற வேத வசனததின்படி ஆண்டவர் ஜெபத்தைக் கேட்டு, இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பின்னாக நடந்தார். எகிப்தின் இராணுவ தடவாளங்கள் யாவும் கடலிலே அமிழ்ந்துபோனது. ஆண்டவர் எகிப்தின் சேனையும், இஸ்ரவேல் ஜனங்களும் கலந்துவிடாதபடி, நடுவில் நின்று, பார்வோனின் சேனையைச் சுற்றி, மேகத்தையும், அந்தகாரத்தையும் கட்டளையிட்டார். இஸ்ரவேல் ஜனங்களுக்கோ இரவை வெளிச்சமாக்கினார் (யாத். 14:20).

தடைகளை உடைக்கிற ஆண்டவர் உங்களுக்கு முன்னால் போவாரானால், உங்கள் வாழ்வில் என்னென்ன தடைகளையெல்லாம் அவர் நீக்கி, உங்களை ஆசீர்வதிக்கிறார் என்பதைக் குறித்து தியானிப்போம்:

### 1) உங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு எதிரான தடைகளை, ஆண்டவர் உடைக்கிறார்:

ஆண்டவர் உங்களுக்கு முன்பதாக செல்லும்போது, உங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு எதிராக இருக்கின்ற தடைகளை உடைக்கிறார். வேதம் சொல்லுகிறது:

**"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும் தடைசெய்யாதே உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்..."(ஏசாயா 54:2).**

### அ) கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு:

முதலாவது ஆண்டவர் சொல்லுகிறார், உங்கள் தொழில் கூடங்களின் இடத்தை ஆண்டவர் விசாலமாக்கப்போகிறார். என்னுடைய தொழில் கூடங்களுக்கு என்னால் வாடகை கொடுக்க முடியவில்லை. நான் தடுமாறிக்கொண்டு இருக்கின்றேன் என அநேகம் பேர் வேதனையோடு இருக்கின்றீர்கள். இன்றைக்கு ஆண்டவர் உங்கள் தொழிலுக்கும், நீங்கள் குடும்பமாக வாழ்வதற்கும் சொந்த இடத்தைக் கொடுக்கப் போகிறார். விசுவாசித்தால் தேவ மகிமையை காண்பீர்கள்.

### ஆ) வாசஸ்தலங்களின் திரைகளை விரிவாக்கு:

இரண்டாவதாக, உன் வாசஸ்தங்களின் திரைகள் விரிவாகட்டும். சிறிய வீட்டிலிருக்கிற உங்களுக்குப், பெரிய அளவில், பெரிய வீடுகளைத் தருவார். சொந்த வீட்டிலிருக்கிறவர்களை, சொந்த இடத்திலிருந்து வியாபாரம் செய்கிறவர்களை ஆண்டவர் அடுத்த நிலைக்கு, விரிவாக்கத்திற்கு கொண்டுபோகப் போகிறார். அது அவருக்கு லேசான காரியம். (2 நாளாகமம் 14:11).



ஒரு ஐயா அவர்கள் தன் பிள்ளைகள் வாழ்வில் நடந்த 2 அற்புதங்களை பகிர்ந்துகொண்டார். நாகர்கோவில் நகரில் அவருடைய மருமகன், தன் 4-வது திருமண நாளன்று, பைக்கில் செல் லும்போது, கீழே விழுந்து, மண்டை உடைந்துவிட்டது. மிகவும் ஆபத்தான நிலையில், அவருடைய மருமகனை மருத்துவமனையில் அனுமதித்தார்கள்.எனக்கும் தெரியப்படுத்தினார்கள். நான் ஜெபிக்கச் சென்றபோது, அந்த தம்பியை அறுவை சிகிச்சை செய்யும் இடத்திற்கு கொண்டுசென்றுவிட்டார்கள். ஆகவே, அந்தத் தம்பியின் மனைவியைப் பார்த்து, முதலாவது

அவள் கணவரின் ஆப்பரேஷன் வெற்றிகரமாக முடியவேண்டும் என ஜெபித்தேன். இரண்டாவது, அந்த மகளுக்காக ஜெபித்தபோது, "மகளே, இப்பொழுது டிசம்பர் மாதத்திலிருக்கிறாய், அடுத்த வருடம் டிசம்பர் மாதத்திற்குள்ளாக உன் கையிலே ஒரு ஆண் குழந்தையைக் கொடுப்பேன்" என்று ஆண்டவர் சொல்லுகிறார் என்றேன். அதே போல ஆண்டவர் அவர்கள் கணவரை சுகப்படுத்தி, அவர்களுக்கு அருமையான ஆண் குழந்தையை கொடுத்தார்.

மேலும் ஐயா அவர்களின் மகன் திடீரென வேலை இழந்தான். ஆகவே, அவர்கள் மகனும், மருமகளும் என்னிடம் ஜெபிக்கும்படி வந்தார்கள். அப்பொழுது ஆண்டவர் சொன்னார், "நீங்கள் இருவரும் அரசுத் தேர்வுகளை எழுத தயாராகுங்கள். உங்கள் இருவருக்கும் அரசு வேலைகளை கொடுப்பேன்" என்றார். ஆண்டவர் சொன்னபடியே, அவர்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்தார். தற்போது அவர்களுடைய மகன் அரசு வங்கியில் மேலாளராகவும், அவர்களுடைய மருமகள் தபால் துறையில், உயர் அதிகாரியாகவும் இருக்கிறார்கள். ஆண்டவர் விரிவாக்கம் என்று சொன்னால், அது விரிவாக்கம்தான். அல்லேலூயா.

## இ) உன் கயிறுகளை நீளமாக்கி முளைகளை உறுதிப்படுத்து:

இன்றைக்கு நீங்கள் எதிர்பார்க்கிற அற்புதங்கள் உங்களுக்கு நடக்க வேண்டுமென்றால், ஆண்டவர் சொன்னதை செய்கிற வரைக்கும் உங்களைவிட்டு விலகமாட்டார், உங்களை கைவிடவுமாட்டார் என்ற நம்பிக்கையோடு, உங்கள் விசுவாசக் கயிறுகளை நீளமாக்க வேண்டும். அப்பொழுது உங்கள் முளைகள் உறுதிப்படும். உங்களுடைய, உங்கள் பிள்ளைகளுடைய தொழில், படிப்பு, வேலை உறுதிப்படும். அப்படி உறுதிப்படுத்தின பின்னர் என்ன நடக்கும்?

## ஈ) நீ வலது புறத்திலும், இடதுபுறத்திலும் பலங்கொண்டு பெருகுவாய்:

ஈசாக்கு பிழைப்பிற்காக கேராரூர் என்கிற ஊருக்குப் போனார். ஈசாக்கின் வேலைக்காரர்கள், அங்கு துரவை தோண்டினபோது, கேராரூர் ஊரார், இது எங்களுடையது என்று வாக்குவாதம் பண்ணினார்கள். மறுபடியும் ஒரு துரவை தோண்டினபோது, கேராரூர் ஊரார், இது எங்களுடையது என்று வாக்குவாதம் பண்ணினார்கள். பிறகு அவர்கள் தூர இடத்திற்குச் சென்று வேறோரு துரவை வெட்டினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வாக்குவாதம் பண்ணவே இல்லை. ஆனால் ஈசாக்கை அந்த தூர இடத்தில், ஆண்டவர் அற்புதமாய் ஆசீர்வதித்து, பலுகிப் பெருகச் செய்து (ஆதி. 26:12,13, 24), ரெகொபோத் என்ற ஆசீர்வாத நிலைக்கு உயர்த்தினார் (ஆதி. 26:22). அந்த ஆசீர்வாதம் உங்களுக்கும் கிடைக்கும். நீங்கள் வலதுபுறத்திலும், இடது புறத்திலும் பலங்கொண்டு பெருகுவீர்கள்.

## 2) உங்கள் குடும்பத்தில் தடைபட்ட சுப காரியங்களை, சுப நிகழ்வுகளை ஆண்டவர் நடத்துவார்:

ஆம், தடைகளை உடைக்கிறவர் உங்களுக்கு முன்னே போனால், உங்கள் குடும்பத்தில் தடைபட்ட சுப காரியங்களை ஆண்டவர் நடத்தி வைப்பார். எலியேசர், ஈசாக்கிற்கு பெண் பார்க்கும்படி செல்லும்போது, "யார் எனக்கும், என் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்க்கின்றாளோ அவள் தான் ஆண்டவரின் சித்தத்தின்படியான பெண்" என்பதை அடையாளமாக பெற்றுக்கொண்டான். அப்படியே ரெபேக்காள் எலியேசருக்கும், அவருடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்தாள்.



விபரங்களையெல்லாம் ரெபேக்காளின் வீட்டாரிடம் தெரிவித்தபோது, அவர்கள் தாயும், சகோதரனும் எலியேசருடன் ரேபேக்காளை அனுப்ப மறுத்து, தடைசெய்தார்கள். ஆனால், ரெபேக்காளிடம் கேட்டபோது, அவள் எலியேசரோடு போகிறேன் என சம்மதம் தெரிவித்தாள் (ஆதி. 24:56). ரெபேக்காளின் வீட்டார், அவளை,"நீ கோடாகோடியாய் பெருகுவாயாக"என வாழ்த்தி

அனுப்பினார்கள் (ஆதி.24:60). அந்த வார்த்தையின்படி அவள் வாழ வந்த இடத்திலே கோடா கோடியாய் பெருகினாள். அதுபோல ஆண்டவர் விரும்புகிறபடி, அவருடைய சித்தப்படி உங்களுக்கு வாழ்க்கை அமைந்தால், நீங்கள் அங்கு சிறப்பாக, சுதந்திரமாக வாழ முடியும் (சங்கீதம் 16:6). அல்லேலூயா.

### 3) தடைகளை உடைத்து உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார்:

ஆண்டவர் உங்களுக்கு முன்பாக செல்லும்போது, தடைகளை உடைத்து, உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். வேதம் சொல்லுகிறது:

**“இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” (மத்தேயு 19:14,15)**

ஆண்டவர் சிறு பிள்ளைகளை மிகவும் நேசித்தார். அவர்கள் என்னிடம் வர இடங்கொடுங்கள். அவர்களை தடைசெய்யாதிருங்கள் என்றார். ஆனால், இயேசுவின் சீடர்களோ தடைசெய்தார்கள். இன்றைக்கும் உங்கள் பிள்ளைகள் ஆண்டவரிடம் நெருங்காதபடி யாரோ ஒருவர் தடை செய்யலாம். உன் பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை தடைசெய்து, அவர்களுக்கு துர்ஆலோசனை கொடுத்து, உங்கள் பிள்ளைகளை உங்களைவிட்டு பிரித்துவிட தந்திரம் செய்யலாம். அந்தத் தடைகளை ஆண்டவர் இன்றைக்கு உடைக்கிறார்.

**“இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்” (ஏசாயா 8:18)**

என்ற வேத வசனத்தின்படி, ஆண்டவருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் இடையில் ஒரு நெருக்கமான உறவை கொண்டுவர விரும்புகிறார். கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளுக்குள் வைத்து பாதுகாப்பதுபோல, ஆண்டவர் உங்கள் பிள்ளைகளை கூட்டிச் சேர்க்க மனதாய் இருக்கிறார் (மத்தேயு 23:37).

அநேகர் எனக்குக் குழந்தை பாக்கியமே இல்லை என்று சொல்லுகிறீர்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார், “ஆண்டவர் உங்களுக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தால், அதை நான் உமக்கென ஒப்புக்கொடுத்து, உம்முடைய கட்டுப்பாட்டில் வளர்ப்பேன் என வாக்குக் கொடுங்கள். அதை விசுவாச கண்களில் பார்த்து, அவரை ஸ்தோத்தரியுங்கள். அப்படித்தான் அன்னாள் செய்தாள். ஆண்டவர் சாமுவேலைக் கொடுத்தார் (1 சாமுவேல் 1:10,20). அதே தேவன் உங்களுக்கும் செய்வார்.



ஒரு சகோதரி இப்படியாக சாட்சி சொன்னார்கள். அவர்கள் ஏழு வருடமாக குழந்தை இல்லாமல் இருந்தார்கள்.பி.சி.ஓ.டி. சிஸ்ட் அவர்கள் ஓவரிஸ்டில் இருந்ததால், எத்தனையோ வருடமாக அவர்கள் சிகிச்சை எடுத்தும், பிரயோஜனமில்லை. டாக்டர் சொன்னார், “நீங்கள் தாய்மை அடைவதற்கு இனி வாய்ப்பே இல்லை. ஆகவே நீங்கள் ஒரு குழந்தையை தத்தெடுத்துக்கொள்ளுங்கள்” என்றார். அவர்கள் உடனே அழுதுகொண்டு “அன்பரின் பாதத்தில் ஒரு நாள்” கூட்டத்திற்கு வந்தார்கள். ஆண்டவர் தனி ஜெபத்தில், “உனக்கு ஒரு ஆண் பிள்ளையை கர்த்தர் கொடுப்பார். அதை கர்த்தருக்கு ஒப்புக்கொடு” என்றார். அதுபோல ஆண்டவர் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். அல்லேலூயா.

இதே அற்புதம் உங்களுக்கும் நடக்கும். பிள்ளையில்லாத உங்கள் கர்ப்பத்தின் தடைகளை ஆண்டவர் இன்றைக்கு உடைக்கிறார்.

### 4) உங்கள் சரீரத்தில் ஆரோக்கியத்தை கட்டளையிடுவார்:

ஆண்டவர் உங்கள் வாழ்வில், உங்களுக்கு முன்பாக சென்று, தடைகளை உடைக்கும்போது,

உங்கள் சரீரத்தில் பூரண சுகத்தைக் கட்டளையிடுவார்.

வேதத்திலே 38 வருடம் வியாதியாயிருந்த ஒரு மனிதன், பெதஸ்தா குளத்தண்டையில் படுத்துக்கிடந்தான். குளத்தில் தேவ தூதன் வந்து தண்ணீரை கலக்கும்போது, யார் முதலில் குளத்தில் இறங்குகிறார்களோ அவர்கள் சுகமடைவார்கள். ஆனால் ஆண்டவர் அவனை தேடி வந்தார். அவனிடம் ஆண்டவர் சுகமடையவேண்டும் என்று விரும்புகிறாயா? என்று கேட்டார். "ஆண்டவரே, குளத்தில் தண்ணீர் கலக்கப்படும்போது, என்னை குளத்தில் கொண்டுபோய்விட யாருமே இல்லை. என்னுடைய சரீர சுகவீனம், குளம் கலக்கப்படும்போது செல்லமுடியாதபடி, பெரிய தடையாக இருக்கிறது என்றான். இயேசு அவனை நோக்கி, "எழுந்திரு. உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அவன் சுகமடைந்தான் (யோவான் 5:1-10). ஆம் நீங்கள் ஆரோக்கியமாக வாழமுடியாதபடி, பிசாசு கொண்டுவந்துள்ள தடைகளை, நோய்களை ஆண்டவர் மாற்றி, உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை கட்டளையிடுவார்!



சென்னை திருவல்லிக்கேணியை சார்ந்த, கார்த்திக் என்பவர் இவ்விதமாக ஒரு சாட்சியை பகிர்ந்துகொண்டார். அவர் தன்னுடைய இரண்டு கிட்னிகளும் செயலிழந்த நிலையில், டையலிசிஸ் பண்ணிக்கொண்டிருந்தார். டாக்டர் சொன்னார், "டயலிசிஸ் பண்ண, உன் சரீரம் எத்தனை நாள் தாக்குப்பிடிக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே "உன்னுடைய இரண்டு கிட்னிகளையும் மாற்றவேண்டும். அல்லது ஒரு கிட்னியையாவது மாற்ற வேண்டும்" என்றார். அவனுடைய தாயார் அவனுக்கு கிட்னி கொடுக்க முன் வந்தார்கள். இந்த நேரத்தில், அவர் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" கூட்டத்தில் கலந்துகொண்டு, என்னிடம் ஜெபித்துக்கொண்டார். ஆண்டவர் சொன்னார், "உன்னுடைய கிட்னிகள் இரண்டையும் புதிதாக்குகிறேன். நீ மருத்துவரிடம் போய் காண்பி" என்றார். என்னிடம் ஜெபித்த பின்னர், அவரை கிட்னி மாற்று அறுவைசிகிச்சை செய்யும்படி மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அப்போது மருத்துவர், அவருடைய கிரியாட்டினின் லெவல் (Creatinine level) எப்படி இருக்கிறது? என்று பரிசோதித்தபோது, அவரது பழைய கிரியாட்டினின் லெவல் 12 என்று இருந்தது, தற்போது 1.4க்கு வந்துள்ளது என ரிப்போர்ட் வந்தது. மருத்துவர் இது எப்படி நடந்தது? என ஆச்சரியமடைந்தார். "இனி உனக்கு கிட்னி மாற்ற வேண்டாம். உன்னுடைய கிட்னிகள் இரண்டும் சரியாக செயல்படுகிறது" என்றார். அல்லேலூயா.



ஆம் தடைகளை உடைக்கிற ஆண்டவர் உங்களுக்கு முன்பாக செல்லும்போது, உங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு எதிராக உள்ள தடைகளையெல்லாம் நீக்குவார்! நீங்கள் வாழ்ந்து சுகித்திருக்கும்படி, உங்கள் கூடாரங்களை விசாலமாக்கி, உங்கள் வாசஸ்தலங்களின் திரைகளை விரிவாக்குவார்! விசுவாச கயிறுகளை நீங்கள் நீளமாக்கும்போது, அவர் உங்கள் வாழ்வில் எண்ணிமுடியாத அதிசயங்களைச் செய்தருளி, உங்கள் முளைகளை உறுதிப்படுத்துவார்! தடைகளை உடைத்து, உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார்! உங்கள் சரீரத்தில் பூரண சுகத்தை அருளுவார்! ஆமென்.

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள்

# வாழ்த்துக்கள்

“ நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் திகையாதே, நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்”

(ஏசாயா 41:10).

பிப்ரவரி மாதம் பிறத்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உங்கள் அனைவருக்கும் தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கிறோம்.








# சிறப்பு புது வருட வாக்குத்தத்த ஆராதனை

## அன்பரின் பாதத்தில் ஒரு நாள்!

(ஜனவரி 2, 2021)

(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், ஆசிரியர், மாங்கள வார்த்தை)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர - சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

இந்த மாதம், 2021-ஆம் ஆண்டு சிறப்புப் புது வருட வாக்குத்தத்த ஆராதனையை குறித்து உங்களுக்கு எழுதுவதில் நான் பெருமிதம்கொள்கிறேன். இந்த ஆண்டு புது வருட ஆராதனையை, நாங்கள் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள் கூட்டமாகவே" நடத்தினோம். இக்கூட்டம் ஜனவரி 2, 2020 காலை 9.30 முதல் மதியம் 2.00 மணி வரை, சென்னை, வேப்பேரி, ரித்தர்டன் சாலை, அனிதா மெட்ரிக்குலேஷன் பள்ளி அருகில் அமைந்துள்ள B.K.N ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

### 9 மாதங்களுக்குப் பிறகு "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்":

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், அவருடைய வழிநடத்துதலினாலும், இந்த பொது முடக்க காலங்களில் (April to December) "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகையை நேரலையாக நடத்த கிருபை செய்தார். கடந்த 9 மாதங்களுக்குப் பிறகு "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை, ஜனவரி மாதம் 2-ஆம் தேதி ஒழுங்கு செய்யப்பட்டது. அரசு நெறிமுறைகளை 100% பின்பற்றி, இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டோர் அனைவரும் ஆன்லைனில், இலவசமாக முன்பதிவுசெய்து, அட்மிஷன் கார்டை பெற்றுக்கொண்டனர். அநேகர் தேவனின் அன்பு ஜெப கோபுரத்திற்கு நேரடியாக வருகை தந்து அட்மிஷன் கார்டை பெற்றுக்கொண்டனர். முகக் கவசம் அணிந்து, அட்மிஷன் கார்டை கொண்டு வந்தவர்கள் மட்டுமே, கூட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

## உற்சாகத்துடன் கலந்துகொண்ட ஆத்துமாக்கள்:

ஜனவரி 2-ஆம் தேதி நடைபெற்ற "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாச கூடுகையில், பல மாநிலங்களிலிருந்தும் ஆத்துமாக்கள் உற்சாகத்துடன் வந்து கலந்துகொண்டு, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

**"...என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்" (யாத்திராகமம் 20:24)**

என்ற வேத வசனத்தின்படி, ஆண்டவர் இக்கூட்டம் ஆரம்பம் முதல் முடிவு வரை மகிமையான காரியங்களைச் செய்தருளினார்! பாஸ்டர் லியோ நெல்சன் அவர்கள், பாடல்கள் பாடி, ஆராதனையை நடத்தினார்கள். சிறப்புப் பாடல்களை சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், சகோதரி பவ்யா டெரில், சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன் ஆகியோர் பாடி ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

## நேரலை நிகழ்வு:

"அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" புது வருட வாக்குத்தத்த ஆராதனையை அதிசயம் டி.வி, ஷம்மா டி.வி, தொலைக்காட்சிகளில் நேரலையாக, உலகெங்கிலும் ஆயிரக்கணக்கானோர் பார்த்து ஆண்டவரை மகிமைப்படுத்தினார்கள். மேலும் எங்களது இணையதளம், Youtube மூலம் அநேகர் தொடப்பட்டார்கள். சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் 2021-ஆம் ஆண்டின் வாக்குத்தத்தங்கள் அடங்கிய காலண்டரையும், "கடந்ததை நினைக்காதே, நடந்ததை மறந்துவிடு" என்ற வீடியோ பாடலையும் ஜெபத்துடன் வெளியிட்டார்.

## நீதிமான்களின் ஆண்டு 2021:

சகோதரர் T.ஸ்டீபன் அவர்கள் 2021-ஆம் ஆண்டின் ஆசீர்வாதத்திற்காக பல நாட்கள் ஆண்டவரிடம் காத்திருந்து, பெற்ற "நீதிமான்களின் வருஷம் 2021" என்ற வாக்குத்தத்த செய்தியை, "நீதிமான்கள் பனையைப் போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான்" (சங்கீதம் 92:12) என்ற வேத வசனத்தின்படி பகிர்ந்துகொண்டார்கள். இக்கூட்டத்தில் ஆண்டவர் சகோதரரை வல்லமையாக பயன்படுத்தினார். அநேக மக்கள் விடுதலையடைந்தார்கள்.

கொரோனா தாக்கத்தால், கடந்த வருடத்தில் நாம் அநேக இழப்புகளை சந்தித்திருக்கிறோம். யாரும் எனக்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை என்று சொல்லிவிட முடியாது. கடந்த வருடத்தில் உங்களில் பலர் வீட்டிற்குள்ளேயே முடங்கி இருந்ததினால், வேலைகளை இழந்திருக்கலாம், பொருளாதாரத்தை இழந்திருக்கலாம், தொழிலில் நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம், உங்கள் சரீர ஆரோக்கியத்தை இழந்திருக்கலாம். இவை எல்லாவற்றையும் மீட்டுக்கொள்ள ஒரே வழி, நீங்கள் உங்களை நீதிமார்க்கத்திற்கு ஒப்புக்கொடுப்பதுதான். அப்பொழுது இழந்த எல்லாவற்றையும் நீங்கள் மீட்டுக்கொள்வீர்கள். நமது தேவனை குறித்து வேதம் சொல்லுகிறது:



**"...இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிற தேவன்..." (ரோமர் 4:17).**

தாவீது எல்லாவற்றையும் இழந்து நெருக்கடியான நிலையில் இருந்தபோது, ஆண்டவரிடம் வேண்டினான் (1 சாமுவேல் 30:8). ஆண்டவர் அவன் இழந்தவைகளையெல்லாம் திருப்பிக் கொடுத்தார் (1 சாமுவேல் 30:19). யோபு பக்தன் ஒரே நாளில் எல்லாவற்றையும் இழந்தான். அவன் தன் சிநேகிதருக்காக வேண்டிக்கொண்டபோது ஆண்டவர் இழந்தவைகளை இரட்டிப்பாய் கொடுத்தார் (யோபு 42:10). அதுபோல் எந்த சூழ்நிலையில் நீங்கள் இருந்தாலும், உங்களை நீதிமார்க்கத்திற்கு அர்ப்பணித்து, ஜெபியுங்கள். இந்த பொது முடக்கத்தில் எவைகளையெல்லாம் இழந்தீர்களோ அவைகளையெல்லாம் மீட்டுக்கொள்வீர்கள்.

ஆண்டவர் தாமே இந்தப் புது வருடத்தில் உங்கள் குறைவுகளையெல்லாம் தமது மகிமையிலே நிறைவாக்கி (பிலிப்பியர் 4:19), உங்கள் வாழ்வில் புதுப்புது ஆசீர்வாதங்களையும், அற்புதங்களையும் செய்தருளி, உங்களை மகிழ்விக்குமாறு நான் கண்ணீரோடு ஜெபித்துள்ளேன்.



**2021 ஆம் ஆண்டின் தரிசனங்களுக்காக ஜெபியுங்கள்:**

➪ கர்த்தருக்குச் சித்தமானால் இவ்வருடம் சென்னையில் தேவனின் அன்பு ஊழியங்களின் புதிய ஜெப கோபுரத்தை கட்டி எழுப்ப இருக்கிறோம். ஜெப கோபுரம் கட்டவிருக்கிற இடத்தில் இருக்கிற ரிலையன்ஸ் டவர் (Reliance Tower) விரைவில் அகற்றப்படவும், புதிய ஜெப கோபுரத்தைக் கட்டி எழுப்புவதற்கான தேவைகள் யாவும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.




➪ "தேவனின் அன்பு" ஊழியங்களின் புதிய ஜெப கோபுரங்களை, கோயம்புத்தூர் மற்றும் பெங்களூர் நகரங்களில் இவ்வருடம் நிறுவ இருக்கிறோம். சகோதரர் அவர்கள், புதிய ஜெப கோபுரங்களுக்காக ஜெபித்தபோது, கோவை ஜெப கோபுரத்திற்கு, ஆண்டவர் "ஆறுதலின் தோட்டம்" என்ற பெயரை கொடுத்தார். புதிய ஜெப கோபுரங்களை நிறுவ தேவையான நபர்களை ஆண்டவர் எழுப்பித்தருமாறும், அதற்கான தேவைகளை சந்திக்குமாறும் ஊக்கமாய் ஜெபியுங்கள்!

➪ அதுமட்டுமல்ல இன்னும் கூடுதலாக மலையாளம் மற்றும் இந்தி மொழிகளில் புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, புதிய சேனல்களில் ஒளிபரப்பவிருக்கிறோம். இதற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். உங்கள் ஜெபமே எங்கள் பெலன்!

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வாதிப்பாராக!

பெண்கள் பகுதி:



# ஆண்டவரைத் தேடினால்!

(சகோதரி **ஜோஸ்பின் ஸ்டீபன்,**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர — சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் யாவரையும் இந்த பிப்ரவரி மாதத்தில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். புதிய வருடத்தின் ஆரம்பம் எப்படி இருக்கிறது? கர்த்தர் எல்லாவற்றையும் மாற்றுவார் என்கிற நம்பிக்கையிலே, நீங்கள் புதிய வருடத்திற்குள் வந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவரைத் தேடுகிற பிள்ளைகளை, அவர் ஒருபோதும் கைவிடுகிறவரல்ல.

ஆம், இது கர்த்தரை தேடுகிற காலம். ஆகவே, நீங்கள் அனுதினமும் ஆண்டவரோடு அதிகாலையில் நேரத்தை செலவிட பழகிக்கொள்ளுங்கள். ஒரு அருமையான வேத வசனம் இவ்விதமாய் சொல்லுகிறது:

**"...நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார் நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" (1 நாளாகமம் 28:9).**

இன்னும் 2 நாளாகமம் 15:2-ஐ வாசிப்பீர்களேயானால், "நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார் நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார் அவரை விட்டீர்களாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்" என்று வேதம் சொல்லுகிறது.

பல வேளைகளில் நாம் கர்த்தரை மறந்து, நம்முடைய வேலைகளில் மூழ்கிப்போய்விடுகிறோம். இதனால் எண்ணற்ற பிரச்சனைகள், போராட்டங்கள், எதிர்பாராத வியாதிகள், இழப்புக்கள், வேதனைகள் நம்மை சூழ்ந்துகொள்ளுகிறது. நாம் விரும்புகிற ஒரு பொருள் தொலைந்துவிட்டால், அதை தேடி கண்டுபிடிப்பதில் எவ்வளவு அக்கறை கொள்ளுகிறோம். நமக்குத் தெரிந்தவர்கள் தொலைந்துவிட்டால் கூட, அவர்களை கண்டுபிடிக்கும் வரை எவ்வளவு முயற்சி எடுக்கிறோம். ஆனால், நம்மைப் படைத்த ஆண்டவரை தொலைத்துவிட்டு, மனம்போல வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவரை தேடுவதற்கு நமக்கு நேரமும் இருப்பதில்லை, எந்தவொரு முயற்சியும் எடுப்பதில்லை. அருமையான வேத வசனம் சொல்லுகிறது:

**"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33)**

அவரைத் தேடுகிறவர்களுக்கு ஆண்டவர் என்னென்ன ஆசீர்வாதங்களையெல்லாம் கொடுக்கிறார் தெரியுமா?

**1) கர்த்தரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது (சங்கீதம் 34:10)**

**2) கர்த்தரை தேடுகிறவர்களை, அவர் ஒருபோதும் கைவிடுகிறதில்லை (சங்கீதம் 9:10)**

**3) கர்த்தரை தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்கிறது (சங்கீதம் 105:3)**

**4) கர்த்தரை தேடுகிறவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பார்கள் (சங்கீதம் 70:4)**

இன்றைக்கு அநேகர் கடவுளைத் தேடி உலகமெல்லாம் அலைகிறார்கள். கர்த்தரை உங்களுக்குள்ளே தான், நீங்கள் தேட வேண்டும். பிரச்சனையின் நேரங்களில், அநேகர் கர்த்தரைத் தேடாமல், கோவில், குளம் என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கர்த்தர் சொல் லுகிறார், "என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோஸ் 5:6).

இந்த மாதத்தில் நாம் நம்மைப் படைத்த ஆண்டவரை எப்படியெல்லாம் தேடவேண்டும் என்று கற்றுக்கொள்ளுவோம்!

## 1) அதிகாலையில் தேடவேண்டும்:

**"....அதிகாலமே உம்மைத் தேடுகிறேன் வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது" (சங்கீதம் 63:1)**

அதிகாலையில் ஆண்டவரை தேடுகிறவர்கள், அவரைக் கண்டடைவார்கள் (நீதிமொழிகள் 8:17). தாவீதுடைய வாழ்க்கையிலே எவ்வளவு பிரச்சனைகள்! குறிப்பாக, கோலியாத் இஸ்ரவேலருக்கு விரோதமாய் வந்தபோது, எல்லாரும் பயந்தார்கள். ஆனால், தாவீதோ கர்த்தரைத் தேடினார். கோலியாத்தை முடியடித்தார் (1 சாமு.17:48-50). அவனோடு கர்த்தர் இருந்ததால், கரடியும், சிங்கமும் ஆட்டுக்குட்டிகளை பிடித்தபோது, அவைகளையெல்லாம் மீட்டுக்கொண்டான் (1 சாமு.17: 34,35).



இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் என்ற தேவ மனிதர், ஆதிகாலையில், மற்ற மனிதர்களைப் பார்ப்பதற்கு முன்பு, தேவனை நோக்கி ஜெபித்து, அவரைப் பார்த்த பிறகு தான் மற்ற வேலைகளில் ஈடுபடுவாராம். நீங்களும் அதிகாலை வேளையை அவருக்குக் கொடுங்கள். இந்த நாட்களிலே நாம் அதிகாலையிலே முதலில் டீ அல்லது காப்பியை அருந்திவிட்டு, நியூஸ் பேப்பரை படிப்பதிலேயே நேரத்தைச் செலவிடுகிறோம். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! இயேசு கிறிஸ்து அதிகாலை வேளையில், பிதாவின் சமூகத்தைத் தேடி வனாந்திரமான இடத்திற்குப் போகவில்லையா? அதுபோல நாமும் அதிகாலை வேளையில் ஆண்டவரை தேட ஒப்புக்கொடுப்போம். அவரிடமிருந்து அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம்.

## 2) முழு இருதயத்தோடு தேடவேண்டும்:

**"சிறியோர் பெரியோர் ஸ்திரீ புருஷர் எல்லாரிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடாதவன் எவனோ அவன் கொலைசெய்யப்படவேண்டும் என்றும் ஒரு உடன்படிக்கை செய்து, மகா சத்தத்தோடும் கெம்பீரத்தோடும் பூரிகைகளோடும் எக்காளங்களோடும் கர்த்தருக்கு முன்பாக ஆணையிட்டார்கள்" (2 நாளாகமம் 15:13,14).**

ராஜாவாகிய ஆசாவின் நாட்களில், கர்த்தரை தேடுவதில் தேசமெங்கும் பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. "ஆசா" என்றால் 'மருத்துவர்'/'வைத்தியர்' என்று அர்த்தம். அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த மருந்து, மாத்திரை எல்லாமே கர்த்தரைத் தேடுங்கள். என்பதே. மட்டுமல்ல ஆசா கர்த்தரின் பார்வைக்கு நன்மையும், செம்மையுமானதைச் செய்தான். நாம் கூட சில வேளைகளிலே முழு மனதோடு ஆண்டவரை தேடத்தான் தேவலாயங்களுக்குச் செல்கிறோம். ஆனால் அங்கேயும் நம்முடைய எண்ணங்கள் எல்லாம் சிதறடிக்கப்படுகிறது. என்ன சமைப்பது? எங்கு செல்வது? என்றே நாம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். உங்கள் சிந்தனைகளை சிதறவிடாதிருங்கள். ஆசா ராஜா அப்படி என்ன தான் ஜெபித்தார்? வேதம் சொல்லுகிறது:

"ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்..." (2 நாளாகமம் 14:11).

அதினால்தான் ஆசாவின் நாட்களிலே, அவனுடைய ராஜ்ஜியம் அமரிக்கையாய் இருந்தது. உங்களுடைய குடும்பங்களிலும், இந்த சந்தோஷம், சமாதானம் வேண்டாமா! ஆம், முழு இருதயத்தோடு ஆண்டவரை தேடுவோம். அவரை கண்டடைவோம்!

### 3) கண்ணீரோடு தேடவேண்டும்:

"மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள் அப்படி அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து கல் லறைக்குள்ளே பார்த்து....." (யோவான் 20:11).

"மரியாள்" என்ற பெயருக்கு "கண்ணீர்" என்று அர்த்தம். இயேசு மரித்து அடக்கம்பண்ணப்பட்ட பின்பு, மரியாள் இருட்டோடே கல்லறைக்குப் போய் கண்ணீரோடு அவரை தேடினாள். அந்தக் கண்ணீர் இயேசுவை தொட்டது. இயேசு கிறிஸ்து அவளை பெயர் சொல்லி அழைத்து, அவளுக்கு சமாதானத்தை அருளினார். ஆம், கண்ணீரோடு தேடுகிறவர்களை அவர் ஒருநாளும் புறக்கணிப்பதில்லை. மரியாளின் வாழ்க்கையில் காணப்பட்ட போராட்டங்களை தேவன் மாற்றியபடியால் தான், அவரைக் கண்ணீரோடு தேடினாள்.

ஒரு சிறு குழந்தை, ஒரு பொருளை கேட்டு அடம் பிடிக்கும்போது, நாம் அதை உடனே வாங்கிக் கொடுப்பதில்லை. ஆனால் அதே குழந்தை கண்ணீர்விட்டு அழுது, ஒரு பொருளை கேட்கும்போது கடன் வாங்கியாவது அந்தப் பொருளை நாம் வாங்கிக் கொடுத்துவிடுகிறோம். அப்படித்தான் நம் ஆண்டவரும் கண்ணீருக்கு உடனடியாக பதில் கொடுக்கிறவர். நாமும் கண்ணீரோடு அவரைத் தேடி சமாதானத்தை சந்தோஷத்தை பெற்றுக்கொள்ளுவோம். எப்படிப்பட்ட கல் நெஞ்சையும் கரைக்கும் ஒரே ஆயுதம் கண்ணீர்தான். நாம் ஜெபிப்போமா. சந்தோஷத்தோடு இந்தப் பாடலைப் பாடி நம் தேவனை மகிமைப்படுத்துவோமா!

**இயேசுவை நாம் எங்கே காணலாம்**
**அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்**
**இயேசுவை நாம் எங்கே காணலாம்**

**ஜெபம்:** அன்பின் ஆண்டவரே, இந்த தேவ செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவருக்காகவும் நான் கண்ணீரோடு ஜெபிக்கிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் உம்மை முழு மனதோடு நேசித்து, உம்மில் அன்பு செலுத்தவும், அதிகாலையிலே உம்மைத் தேடி, உம்மைக் கண்டடையவும், உம்மிலே பெலன்கொள்ளவும் கிருபை தாரும். அவர்கள் வாழ்க்கையில் காணப்படும் எல்லா நெருக்கங்களையும், பாடுகளையும் நீர் எடுத்துப்போட்டு, உம்முடைய சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் அவர்களை நிரப்பும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.



# வேத வினா போட்டி — 8
## விதிமுறைகள்

1) சரியான விடை எழுதுபவர்களுக்கு, பரிசு கொடுக்கப்படும்.

2) அதிகமானவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறையில், பரிசளிக்கப்படும்.

3) விடைகள் அனைத்தும் வசன ஆதாரங்களுடன் இருக்கவேண்டும். விடைகள் ஒவ்வொருமாதமும் 20-ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்துசேரவேண்டும். அனுப்பவேண்டிய முகவரி:

Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்,
தேவனின் அன்பு ஊழியங்கள்,
எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில்,
கொட்டிவாக்கம், சென்னை - 600 041.
Phone: +91 44 2454 7999 || 99419 50999
Email: publications@godsloveministries.co.in
Website: www.godsloveministries.co.in

**குலுக்கல் முறையில் ஜனவரி மாதம் பரிசை வென்றவர்கள்**

1)Sis P.அதிஷ்டா,மதுரை 1)Sis P.குயினி எபனேசர்,சென்னை

### ஜனவரி மாத விடைகள்

1) யோசேப்பு (ஆதியாகமம் 49:22)
2) 950 வருடங்கள் (ஆதியாகமம் 9:29)
3) ஆவிலா (ஆதியாகமம் 2:11)
4) கிழக்கே (ஆதியாகமம் 2:8)
5) மேத்தூசலா, 969 வருடங்கள் (ஆதியாகமம் 5:27).
6) புறா (ஆதியாகமம் 8:10)
7) ஆஸ்நாத் (ஆதியாகமம் 46:20)
8) நிம்ரோத் (ஆதியாகமம் 10:9)
9) இஸ்மவேல் (ஆதியாகமம் 21:20)
10) ராமசேஸ் (ஆதியாகமம் 47:11).

### பிப்ரவரி மாத கேள்விகள்

1) கர்த்தர் மனுஷனை எதற்காக ஏதேன் தோட்டத்தில் வைத்தார்?
2) கர்த்தர் எதற்காக மனஸ்தாபப்பட்டார்?
3) யாருக்குத் தொடைச்சந்து சுளுக்கிற்று?
4) சொப்பனக்காரன் யார்?
5) கிழச்சிங்கம் போல் மடங்கிப் படுத்தவன் யார்?
6) சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டவன் யார்?
7) ஒரே நாளில் விருத்தசேதனம்பண்ணப்பட்ட தகப்பன், மகன் யார்?
8) ஆபிரகாம் எத்தனை சேக்கல் நிறை வெள்ளியை நிறுத்துக்கொடுத்தான்?
9) லாபான் யாக்கோபை எங்கே கண்டுபிடித்தான்?
10) என் தகப்பனே என்னையும் ஆசீர்வதியும் என்று அழுதவன் யார்?

## சாட்சி பகுதி:



# ஆண்டவரின் அற்புதங்கள்!

சகோதரர் T. **ஸ்டீபன்** அவர்கள் ஆண்டவருடைய முழு நேர அழைப்பை பெற்று, "தேவனின் அன்பு ஊழியத்தை ஸ்தாபித்து, உலகெலங்கிலும் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படும் ஒரு கிருபாபாத்திரம். இவரது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் இவர் நடத்தும் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை மற்றும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தும் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனைகள் உலகப் பிரசித்திபெற்றவை. விசேஷமாக, இவரது தனி ஜெபத்தில் ஆண்டவர் வெளிப்படுத்தும் மங்கள வார்த்தைகள், உள்ளம் உடைந்த அநேக மக்களை ஆறுதல்படுத்தியுள்ளது அநேகரை சுகப்படுத்தியிருக்கிறது ஆவிக்குரிய வாழ்வில் தொய்ந்தவர்களை. ஆண்டவரில் துளிர்விடச் செய்திருக்கிறது. இவரது ஊழியத்தின் மூலம் உலகெங்கிலும் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டோர் ஏராளம்! ஏராளம்! உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்படி, சில சாட்சிகளை கீழே தந்துள்ளோம்:

## கட்டுகளை அறுத்து, பூரண சுகம் கொடுத்த தேவன்!



கடந்த சில மாதங்களாக பிசாசின் கட்டுகளினால் பாதிக்கப்பட்டு மனநிம்மதி இல்லாமல் இருந்தேன். என்னுடைய கால்களிலும், வயிற்றுப் பகுதிகளிலும் பயங்கரமான வேதனை இருந்தது. அநேக ஊழியர்களிடம் ஜெபித்துக்கொண்டேன். விடுதலை இல்லை. மந்திரவாதம் செய்தால் சரியாகும் என எண்ணி, 25 இலட்சம் செலவு செய்தேன். ஒன்றும் பிரயோஜனமில்லை. ஆகவே செத்துவிடுவதுதான் ஒரே தீர்வு என்று முடிவு செய்தேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னுடைய சகோதரி அடைக்கலப்பட்டணத்திற்கு சென்று ஜெபம் செய்தால் விடுதலை கிடைக்கும் என்று சொன்னாள். நடக்க முடியாத நிலையில் இருந்த என்னை, என் கணவரும், மகனும் சேர்ந்து அடைக்கலப்பட்டணத்திற்கு தூக்கிக் கொண்டு கொண்டுவந்தார்கள். ஜெப வீரர் நாகூம் 1:13ன்படி, "உன்னுடைய நுகத்தை முறித்து கட்டுகளையெல்லாம் அறுக்கிறேன்" என ஜெப எண்ணெய் பூசி ஜெபம் செய்தார். என்ன ஆச்சரியம்! ஜெபித்த ஒரு சில தினங்களுக்குள், ஆண்டவர் எனக்குப் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனின் அன்பு ஜெப கோபுரத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை கர்த்தர் கேட்டு, செய்த அற்புதத்திற்காக அவருக்கு கோடா கோடி நன்றி செலுத்துகிறேன்.

**பிரின்ஸி கிருபா, சைதாப்பேட்டை, சென்னை**

## கட்டி மறைந்தது!



கடந்த 15 வருடங்களாக என் இடது முதுகில் இருந்த ஒரு கட்டியினால் தாங்கமுடியாத வேதனையை அனுபவித்து வந்தேன். சகோதரர் T. ஸ்டீபன் அவர்களின் தேவ செய்தியை, ஏஞ்சல் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தேன். சகோதரர் கொடுத்த செய்தியின் நடுவில் தீர்க்கதரிசனமாக ஒரு வார்த்தை சொன்னார். "ஒரு சகோதரன் 15 வருடங்களாக, இடதுபக்கம் முதுகில் எலும்பிச்சம் பழம் அளவு கட்டியோடு, உட்கார்ந்திருக்கிறார்" என்றார். சோபாவில் உட்கார்ந்திருந்த நான் எழுந்து டி.வியை நோக்கி ஓடி, டி.வியின் மேல் என் கைகளை வைத்து, "இயேசப்பா சகோதரர் அவர்களின் மங்கள வாக்கின்படியே, இந்த கட்டி மறையட்டும் என ஜெபம்" செய்தேன். அப்பொழுது சகோதரர் அவர்கள் மறுபடியும், "இப்பொழுதே அந்த கட்டி இருந்த இடம் தெரியாமல் மறைகிறது" என்று சொன்னார்கள். எனது இடது முதுகை திரும்பிப் பார்த்தேன். அந்தக் கட்டி மறைந்திருந்தது. ஜெபித்த சகோதரருக்கும், அற்புதம் செய்த ஆண்டவருக்கும் கோடி நன்றிசெலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக!

**தர்மராஜ், பழைய பல்லாவரம்,சென்னை**

## அற்புதங்கள் செய்த தேவன்!



ஒரு சில மாதங்களுக்கு முன்னால், "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூட்டத்தில் கலந்துகொண்டேன். கூட்டத்தின் முடிவில், சகோதரரிடம், மூன்று காரியங்கள் நடந்தால், சாட்சி சொல்வதாக பொருத்தனையோடு ஜெபித்துக்கொண்டேன். "ஆண்டவர் துணை நின்று அனைத்து காரியங்களையும் நிறைவேற்றுவார்" என்று சகோதரர் அவர்கள் மங்கள வார்த்தை சொன்னார். என்ன ஆச்சரியம்! நான் கேட்ட அனைதது காரியங்களையும் ஆண்டவர் நிறைவேற்றினார். 32 வயது ஆகியும் திருமணமாகாதிருந்த என் தங்கையின் இளைய மகளுக்கு திருமணம் நடைபெறவும், என் தங்கையின் மூத்த மகளுக்கு 11 வருடங்களுக்குப் பிறகு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், என் மகள் பி.எட். தேர்வில் முதல் வகுப்பில் வெற்றிபெறவும் ஆண்டவர் கிருபை செய்தார். சகோதரரின் ஜெபங்களைக் கேட்டு, இத்தனை அற்புதங்களையும் செய்த ஆண்டவருக்கே மகிமை செலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக!

**கிறிஸ்டி மங்களராஜ், கொளத்தூர், சென்னை**

## மங்கள வார்த்தை நிறைவேறியது!



சில மாதங்களுக்கு முன், நான் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூட்டத்தில் கலந்துகொண்டு, சகோதரரிடம் ஜெபித்துக்கொண்டேன். அப்பொழுது சகோதரர் அவர்கள் எனக்கு இரண்டு தீர்க்கதரிசனங்களை சொன்னார். 4 வருடங்களாக எனக்கு பதவி உயர்வு கிடைக்காமல், தடைபட்டுக்கொண்டே இருந்தது. "நீங்கள் நீண்டநாள் காத்திருக்கிற பதவி உயர்வு உங்களுக்கு உடனே கைகூடிவரும்" என்று சொன்னார். அதுபோலவே உடனே எனக்குப் பதவி உயர்வு கிடைக்க ஆண்டவர் கிருபை பாராட்டினார். அடுத்து, "தூர தேசத்திற்கு உன்னை அழைத்துச் சென்று ராஜாக்கள் மத்தியில் உன்னை மகிமைப்படுத்துவேன்" என்று சொன்னார். அவர் சொல்லும்போது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏனென்றால் அந்த நேரத்தில் என்னிடம் பாஸ்போர்ட், விசா எதுவுமே இல்லை. என்ன ஆச்சரியம்! அடுத்த மாதமே, என்னுடைய வேலை ஸ்தலத்தில், "நீங்கள் வெளிநாடு போகவேண்டும். உங்களிடம் பாஸ்போர்ட் இருக்கிறதா?" என கேட்டார்கள். 15 நாட்களுக்குள் எனக்கு பாஸ்போர்ட், விசா கிடைத்து, தொடர்ந்து இரண்டு முறை வெளிநாடு சென்று திரும்பும்படி ஆண்டவர் கிருபை செய்தார். சகோதரரின் ஜெபங்களைக் கேட்டு அற்புதம் செய்த ஆண்டவருக்கே உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக!

**டேவிட், தாம்பரம், சென்னை**

## இழந்த வேலையை திரும்ப கொடுத்த தேவன்!



நான் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்துவருகிறேன். நான் வேலை செய்துவந்த கம்பெனியில், என்னுடைய வேலையை, வேறு ஒரு நபருக்குக் கொடுத்துவிட்டார்கள். திடீரென எனக்கு விபத்து ஏற்பட்டதினால், விடுமுறையை முறைப்படி அறிவிக்க கம்பெனிக்குச் சென்றபோது, என்னை கட்டாயப்படுத்தி, ராஜினாமா கடிதம் வாங்கினார்கள். இனிமேல் நீங்கள் வேலைக்கு வரக்கூடாது. உங்கள் டிசம்பர் மாத சம்பளத்தையும் நாங்கள் கொடுக்க முடியாது என சொல் லிவிட்டார்கள். உடனே நான் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூட்டத்திற்கு வந்து, சகோதரரிடம் ஜெபித்துக்கொண்டேன். சகோதரர் அவர்கள், "ஆண்டவர் உன்னுடைய சிறை யிருப்புகளை மாற்றுகிறார்" என மங்கள வாக்கு சொன்னார். என்ன ஆச்சரியம்! அதே மாதமே நான் வேலைசெய்த கம்பெனியிலிருந்து என்னை அழைத்து, மறுபடியும் உடனே வேலையில் சேரும்படி கூறினார்கள். யார் எனக்கு டிசம்பர் மாத சம்பளம் கொடுக்க முடியாது என்று சொன்னாரோ, அவரே எனக்கு டிசம்பர் மாதம் சம்பளத்தை கொடுக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, இழந்த வேலையை திரும்ப கொடுத்த தேவனுக்கு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக!

**புளோரா, மணலி, சென்னை**

## 7 வருடத்திற்கு பிறகு குழந்தை பாக்கியம் கொடுத்த தேவன்!



எனக்குத் திருமணம் முடிந்து 7 வருடங்களாகியும், குழந்தை இல்லாமல் இருந்தேன். என் கணவர் குவைத் தேசத்தில் வேலை செய்ததால், நாங்கள் குடும்பமாக குவைத்தில் வசித்துவந்தோம். குழந்தை பாக்கியத்திற்காக அநேக மருத்துவரை சந்தித்தும், மருந்துகள் சாப்பிட்டும், பல இலட்சம் ரூபாய் செலவு பண்ணியும் எந்த பலனுமில்லை. எங்களுக்கு விசா பிரச்சனை இருந்ததால், குவைத்திலிருந்து நாங்கள் மறுபடியும் சொந்த ஊருக்கு வந்தோம். ஒரு நாள் டி.வியில் சகோதரர் T. ஸ்டீபன் அவர்களின் செய்தியை கேட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது நாகர்கோவிலில் ஜெப கோபுரத்தில் அற்புதம் நடப்பதைப் பற்றி சொன்னார்கள். ஆகவே நாங்கள் குடும்பமாக நாகர்கோவில் ஜெப கோபுரத்திற்குச் சென்று ஜெபித்துக்கொண்டோம். "இந்த மாதமே ஆண்டவர் உங்களை தாய் ஸ்தானத்திற்கும் தகப்பன் ஸ்தானத்திற்கும் கொண்டு போகிறார்" என்று ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம்! ஆண்டவர் ஜெபத்தைக் கேட்டு, என் கர்ப்பத்தை உடனே ஆசீர்வதித்தார். 7 வருட அவமானங்களுக்கு கர்த்தர் ஒரு முடிவை தந்தார். நாகர்கோவில் ஜெப கோபுரத்தில் ஏறெடுத்த ஜெபத்தைக் கேட்டு, ஆண்டவர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு நன்றிசெலுத்துகிறேன். ஆண்டவரின் நாமம் மகிமைப்படுவதாக!

**அனிதா குமாரி, பெத்தேல்புரம், கன்னியாகுமரி மாவட்டம்**

# மார்வெல் திருமண தகவல் மையம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

திருமணம் என்பது பரலோகத்தில் நிச்சயிக்கப்பட்டது. ஆதாம் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட ஆண்டவர், அவனுக்கு ஏற்ற துணையாக ஏவாளை உண்டுபண்ணினார் (ஆதியாகமம் 2:18,21,22). இன்றைக்கும் மணமகனுக்கு ஏற்ற மணவாட்டியை தெரிந்தெடுப்பது ஆண்டவருக்கு முன்பாகவும், அவரது வசனத்திற்கு முன்பாகவும் நேர்த்தியானதாக, அருமையானதாக இருக்கும்!

உங்கள் வசதிக்காக, நாங்கள் மிகுந்த ஜெபத்துடன் மார்வெல் திருமண தகவல் மையத்தை ஆரம்பித்து, பல வருடங்களாக நடத்தி வருகிறோம். எனவே, இத்திருமண மையத்தில் உங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடைய பெயர்களை பதிவுசெய்து, அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகளை தெரிந்தெடுக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஜெபத்தோடு இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுங்கள். கர்த்தருக்குச் சித்தமானது அவரது கரத்தினாலே உங்களுக்கு வாய்க்கும் (ஏசாயா 53:10). மகிமையான நல்விசேஷங்கள் உங்கள் குடும்பத்திலே வசனிக்கப்படும் / பேசப்படும் (சங்கீதம் 87:3).

மேலும் விபரங்களுக்கு 7824855999 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளலாம் அல்லது எங்களது சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை நகரத்திலுள்ள ஜெப கோபுரங்களுக்கு நேரடியாக சென்றும் பதிவுசெய்துகொள்ளலாம். முகவரிகளை கீழே தந்துள்ளோம்:

## சென்னை

**தேவனின் அன்பு ஊழியங்கள்,** எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை – 600 041. மின்னஞ்சல்: info@marvelmatrimony.com அலைபேசி: 78248 55999

## மும்பை

**தேவனின் அன்பு ஊழியங்கள்,** மும்பை ஜெப கோபுரம், எண்.L-411, ட்ரீம்ஸ்-தி-மால், எல்.பி.எஸ். மார்க், சாகர் விஹார் அருகில், பாண்டுப் மேற்கு, மும்பை – 400 078. அலைபேசி: 9930737999

## நாகர்கோவில்

**தேவனின் அன்பு ஊழியங்கள்,** நாகர்கோவில் ஜெப கோபுரம், பாக்கியம் திருமண மண்டப வளாகம், எண். 177, WCC ரோடு, YMCA எதிர்புறம், நாகர்கோவில் – 629 001 கன்னியாகுமரி மாவட்டம். அலைபேசி: 9884480999

அதுமட்டுமல்ல திருமணம், வரவேற்பு போன்ற சுபநிகழ்வுகளில் புகைப்படம் எடுத்தல் (Wedding and Reception photography), வீடியோ எடுத்தல் (Video Coverage) போன்ற பிற சேவைகளையும் நாங்கள் வழங்குகிறோம். விபரங்களுக்கு, www.marvelmatrimony.com என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும் அல்லது 78248 55999 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# சிறுவர்கள் பகுதி

(குட்டீஸ் ஸ்பெஷல்)

# மனம் மாற விரும்புகிறாயா?




## சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன்,

(தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)


*ஹலோ ஃப்ரெண்ட்ஸ்*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் எல்லாரையும் வாழ்த்துகிறேன்!

இந்த பிப்ரவரி மாத இதழ் மூலமாக உங்கள் யாவரையும் சந்திப்பதில் எனக்கு மிகுந்த சந்தோஷம். இந்த மாதமும் ஒரு சிறிய கதையோடுதான் உங்களிடம் வந்திருக்கிறேன். ஒரு ஊரில் தகப்பனும், மகனும் வாழ்ந்து வந்தார்கள். தகப்பனார் பெரிய தொழிலதிபராய், சொந்த வீடு உட்பட அவர் எல்லா வசதிகளையும் உடையவராய் இருந்தார். ஆகவே மகன் டோப்போ எந்தப் பொருளைக் கேட்டாலும் உடனே வாங்கிக் கொடுத்துவிடுவார்.

நாட்கள் கடந்தன. டோப்போ தன் தகப்பனாரை எதிர்த்துப் பேசவும், யார் வீட்டிற்கு வந்தாலும் அவர்களை மதிக்காமல், பள்ளிக்குச் சென்று படிக்காமல், அவனால் செய்யக் கூடிய சிறிய காரியங்களை கூட செய்யாமல், அதிக சோம்பேறியாக தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்ந்து, நேரத்தை வீணடித்து, கெட்டப் பழக்கங்களுக்கு அடிமையானான். இது அவனுடைய தகப்பனாருக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. ஆகவே தன் மகனுக்கு ஒரு பெரியவர் மூலம், புத்தி சொல்ல முடிவெடுத்தார். பெரியவரிடம், "என் மகன் இப்படி தவறான கெட்டப் பழக்கங்களுக்கு அடிமையாக இருக்கிறான். அவன் நன்றாக இருக்கட்டும் என நினைத்து,



அவன் கேட்பதையெல்லாம் நான் வாங்கிக் கொடுத்தேன். ஆனால் இப்பொழுதோ அவன் எனக்கு எதிராக செயல்பட ஆரம்பித்துவிட்டான். எல்லா தவறான பழக்கங்களையும் அவன் கற்றுக்கொண்டான்" என்றார். பெரியவரோ, "உங்கள் மகனை என்னிடம் அழைத்து வாருங்கள். நான் அவனிடம் பேசுகிறேன்" என்றார்.

தகப்பனார் தன் மகன் டோப்போவுடன் அடுத்த நாள் பெரியவரைப் பார்க்கச் சென்றார். பெரியவர் டோப்போவைப் பார்த்து, "என்னப்பா நன்றாக இருக்கிறாயா? சரி வா, நாம் இருவரும் கொஞ்ச நேரம் தோட்டத்தில் சென்று உலாவலாம்" என அழைத்துச் சென்றார். தோட்டத்தில் இருவரும் நடந்துசெல்லும்போது, அநேக மரங்கள், செடிகள் மற்றும் பறவைகள் எல்லாம் அவர்களைச் சுற்றிலும் இருந்தது. பெரியவர், சரி டோப்போ, இந்தத் தோட்டத்தில் இருந்து எனக்காக ஒரு சிறிய செடியை பிடுங்கி வா என்றார். டோப்போ உடனே அதில் ஒரு

சிறிய செடியை பிடுங்கி எடுத்து வந்தான். இன்னும் கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின்னர், மறுபடியும் ஒரு பெரிய செடியை எனக்காக பிடுங்கி வா என்றார். உடனே அவன் செடியைப் பிடுங்கி எடுத்து வந்தான். இன்னும் கொஞ்ச தூரம் சென்ற பின்னர், ஒரு சிறிய மரம் ஒன்று இருந்தது. டோப்போ இந்த மரத்தையும் நீ எனக்காக பிடுங்கி எடுத்துவா என்றார். உடனே அதையும் அவன் கஷ்டப்பட்டு, பிடுங்கி எடுத்து வந்தான்.

கடைசியாக ஒரு பெரிய மரம், ஒன்று உறுதியாக, யாராலும் அசைக்க முடியாமல் இருந்தது. டோப்போ இந்த மரத்தையும் நீ எனக்காக பிடுங்கி எடுத்துவா என்றார். டோப்போ எவ்வளவோ முயற்சி செய்தும், அந்த மரத்தை அவனால் பிடுங்க முடியவில்லை. பெரியவர் வந்தால் தான் அதை பிடுங்கி எடுக்க முடியும் என்று திரும்பி வந்தான். பெரியவர் சொன்னார், "இதன் மூலமாக நான் உனக்கு சொல்வது என்னவென்றால், எந்தவொரு கெட்டப் பழக்கத்தையும் அது சிறிதாக இருக்கும்போது, உன்னைவிட்டு வெளியே எடுத்துவிட்டால், அதை எளிதாக வெளியே எடுத்துவிடலாம். ஆனால் அதை விடாமல் அப்படியே உன்னோடு, வாழ்க்கை முழுவதும் வைத்திருப்பாயானால், எப்படி பெரிய மரத்தை உன்னால் பிடுங்க முடியாமல் இருக்கிறதோ, அதுபோல உனக்குள் இருக்கும் கெட்டப் பழக்கம், அப்படியே உன்னோடிருந்து, பெரிய மரமாக மாறி, பிடுங்கி எடுக்க முடியாமல் போய்விடும். அதன்பின் உன்னைவிட்டு அந்த கெட்டப் பழக்கத்தை எடுக்க நினைத்தாலும், எடுக்கவே முடியாது. அது உன்னை அழித்துவிடும்" என்றார்.

ஆம், கிறிஸ்துவுக்குள் அன்பான சிறு பிள்ளைகளே, இன்றைக்கே, உங்களிடம் இருக்கும் தவறான பழக்கங்களை இயேசப்பாவிடம்,அறிக்கையிட்டு விட்டுவிடுங்கள் (நீதி.28:13). நான் கெட்ட பையனாக இருக்கிறேன், நான் கெட்டப் பிள்ளையாக இருக்கிறேன், எங்கள் அப்பா அம்மாவுக்கு கீழ்ப்படியாமல் இருக்கின்றேன், நான் எல்லாரையும் எதிர்த்துப் பேசுகிறேன், யார் சொல்வதையும் கேட்கமாட்டேன், யாரையும் மதிக்கமாட்டேன் என்கிறீர்களா? இந்த கெட்டப் பழக்கங்களையெல்லாம் என்னிடமிருந்து வேறோடு பிடுங்கி எடுத்துவிடும் என்று இயேசப்பாவிடம் சொல்லுங்கள். ஒரு சிறிய செடியை பிடுங்குவதுபோல ஆண்டவர் அதை எளிதாக பிடுங்கி எடுத்துவிடுவார்.அதை பெரிய மரமாக வளர விடாதேயுங்கள். அப்படி வளர்ந்துவிட்டால் உங்களிமிருந்து அதை எடுக்கவே முடியாது. அது பிறருக்கு மிகுந்த வேதனையை கொடுக்கும். உங்களைச் சுற்றியிருக்கறவர்கள் வருத்தப்படும் அளவிற்கு உங்களை கெட்ட மனிதனாக்கிவிடும். இன்றைக்கே இந்த கெட்டப் பழக்கங்களையெல்லாம் தூக்கி எறியுங்கள்!

நண்பர்களே, டோப்போவைப் போல உங்களிடமும் அநேக கெட்டப் பழக்கங்கள் இருக்கலாம்! உங்கள் பேற்றோரிடம் நீங்கள் சண்டை யிட்டு, அவர்களை வருத்தப்படுத்தியிருக்கலாம்! இன்றைக்கு ஆண்டவர் உங்களில் மாற்றத்தை எதிர்பார்க்கிறார். எளிதாக டோப்போ சிறிய செடியை பிடுங்கி எடுத்ததுபோல உங்களிடமிருக்கும் கெட்ட பழக்கங்களை ஆண்டவர் வெளியே எடுத்துப்போடுவார். உங்களை ஒரு நல்ல பிள்ளையாக, நற்குணங்கள் உடையவர்களாக மாற்றுவார்! (பிலிப்பியர் 4: 5). ஆமென்.





# வாலிபனே, ஆண்டவரில் பெலன்கொள்!

சகோதரி : பவ்யா டெரில்,
(தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

*அன்பான வாலிப தம்பி, தங்கைகளே,*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள்!

உங்களை மீண்டும் இந்த மாத இதழ் மூலமாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். புதிய மாதத்திற்குள் பிரவேசித்துள்ள நீங்கள் யாவரும் நல்ல சுகபெலத்தோடு இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். வேதம் சொல்லுகிறது:

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13).**

ஆம் பிரியமானவர்களே, நம்முடைய பெலத்தினால், நம்முடைய வாழ்க்கையில் ஒன்றுமே செய்ய முடியாது. ஆனால் தேவனுடைய பெலத்தை நாம் பெற்றுக்கொள்ளும்போது, அவர் நம்மை ஒரு ஆசீர்வாதமான பாதையில் நடத்தி, ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ நமக்கு பெலன் தருவார். இதை வேதத்தில் ஒரு அழகான சம்பவத்திலிருந்து நாம் தியானிக்கப் போகிறோம்.

தாவீதின் வாழ்க்கையைக் குறித்து தெரியாதவர்களே இருக்க முடியாது. கோலியாத் இஸ்ரவேல் ஜனங்களை பயமுறுத்தினபோது, தாவீது அவனை முறியடித்து, ஆண்டவருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தினான். தாவீது சாதாரணமாக ஆடுகளை மேய்த்தவன் தான். அவனை ஆண்டவர் தெரிந்தெடுத்து, ராஜாவாக அபிஷேகம் செய்து, உயர்த்தினார். இது எப்படி சாத்தியம் என நாம் பார்க்கலாமா? வேதம் சொல்லுகிறது:

**"பெலிஸ்தன் சுற்றிப்பார்த்து: தாவீதைக் கண்டு, அவன் இளைஞனும் சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியுள்ளவனுமாயிருந்தபடியினால், அவனை அசட்டைபண்ணினான்" (1சாமு. 17:42).**

தாவீது இளைஞனாய் இருப்பதை கோலியாத் பார்த்து அவனை அசட்டை பண்ணினான். தாவீது கோலியாத்தைப் பார்த்தோ, அவனுடைய முரட்டு சரீரத்தைப் பார்த்தோ, அவன் அணிந்திருந்த யுத்த தளவாடங்களைப் பார்த்தோ அவன் முன்னால் போய் நிற்கவில்லை. ஆண்டவருடைய நாமத்தினாலே போய் நின்றான். யுத்தம் கர்த்தருடையது அவர் கோலியத்தை தன் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று நம்பினான்" (1 சாமுவேல் 17:47). அதுபோல ஆண்டவர் தாவீதுக்கு வெற்றியைக் கொடுத்து, அவனை பிரபலமாக்கினார். ஆம், தாவீதின் இருதயத்தைக் கர்த்தர் பார்த்தார் (1 சாமுவேல் 16:7).

இம்மாதம் தாவீதின் வாழ்க்கையிலிருந்து மூன்று காரியங்களை நாம் கற்றுக்கொண்டு, ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவிருக்கிறோம்.

## 1) தாவீது கர்த்தரை நம்பினான்:

முதலாவது, தாவீது கர்த்தரை நம்பினான். வேதம் சொல்லுகிறது:

**"கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார் என் இருதயம் அவரை நம்பியிருந்து நான் சகாயம் பெற்றேன் ஆகையால் என் இருதயம் களிகூருகிறது என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்" (சங்கீதம் 28:7).**

அநேகர் கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடத்தில் என்ன நடக்கப்போகிறதோ? என்று எதிர்பார்ப்புகளோடு, பயத்தோடு, நம்பிக்கை இழந்த நிலையில் இருக்கின்றீர்கள். ஆனால், தாவீது சிறுவனாக இருந்தாலும், ஆண்டவரை நம்பினான். சகாயம் பெற்றான். ஆகவே, கர்த்தர் எனக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார் (சங்கீதம் 138:8), தாம் அபிஷேகம் பண்ணினவர்களுக்கு அடைக்கலமாய் இருக்கிறார் என்பதை நாம் நம்புவோம் (சங்கீதம் 28:8). அவரில் பெலன்கொள்ளுவோம்

## 2) தாவீது மாயைக்கு விலகி, ஆண்டவருடைய வழிகளில் நடந்தான்:

இரண்டாவது, தாவீது தன்னை மாயைக்கு விலக்கி, அவருடைய வழிகளில் நடக்க தன்னை முற்றிலும் அர்ப்பணித்தான். மாயையைப் பாராதபடி, என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும் (சங்கீதம் 119:37). நான் என்றைக்கும் உமது வேதத்தைக் காத்துக்கொள்ளுவேன் (சங்கீதம் 119:44) என்றான். ஆகவே தான் தேவன் சாதாரண ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தவனை ராஜாவாக அபிஷேகம் செய்தார் (சங்கீதம் 78:70). அதுபோல இந்த பொது முடக்க நாட்களில் அநேகர் வீட்டைவிட்டு வெளியே வராமல், வீட்டிற்குள் இருந்துகொண்டே வேலை செய்வதால், மனஅழுத்தம் ஏற்பட்டு, ஆண்டவரின் நோக்கத்தை நிறைவேற்ற தவறி விடுகிறார்கள். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, இச்சைகளுக்கு விலகி, வேதத்தை ஒழுங்காக வாசித்து, நம்முடைய இருதயத்தை உறுதிப்படுத்திக்கொண்டால், அவர் நம்மை தம்முடைய வழிகளில் நடத்துவார் என்பதில் சந்தேகமே இல்லை.

## 3) தாவீது ஜெபிப்பதிலும், தேவனை துதிப்பதிலும் உறுதியாய் தரித்திருந்தான்:

மூன்றாவதாக, தாவீது அனுதினமும் தவறாமல் மூன்றுவேளை ஜெபித்து (சங்கீதம் 55:17), ஆண்டவரை ஏழு முறை துதிப்பதை தன்னுடைய வாழ்வில் வழக்கமாகக் கொண்டிருந்தான் (சங்கீதம் 119:164). அதுபோல நாம் ஆண்டவரை துதிக்கும்போது, தேவன் நமக்கு ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அருள்புரிவார்!

மேற்கண்ட மூன்று காரியங்களை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அப்பியாசப்படுத்தும்போது, நீங்கள் மாயையின் காரியங்களுக்கு விலகி, அவரில் பெலன்கொள்ள இயலும்

**"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:6,7).**

என்ற வேத வசனங்களின்படி, நம்முடைய கவலைகளை, பாரங்களை ஆண்டவரில் வைக்கும்போது, அவர் நம்மை பூரண சமாதானத்தினால் நிறைத்து, மாயைக்கு விலக்கி, அவரில் பெலன்கொள்ளும்படிச் செய்வார்! அல்லேலூயா.

**ஜெபம்:**

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற ஒவ்வொருவரும் தாவீதைப் போல உம்மையே நம்பியிருக்கவும், மாயைக்கு விலகி, உம்முடைய வழிகளில் நடக்கவும், அனுதினமும் உம்மை நோக்கிப் பார்த்து, உம்மில் பெலன் கொள்ளவும் கிருபை செய்தருளும். வாலிப நாட்களில் ஒவ்வொருவரும் உமக்கு பயந்து வாழ்ந்து, உம்முடைய வேதத்தைக் கருத்தாய் வாசித்து, தியானித்து நடக்க கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.



6
Feb 2021
MORNING
9.30 AM TO 2.30 PM
ANBARIN PAATHATHIL
Oru Naal
BKN AUDITORIUM
5/6, Ritherdon Road, Vepery,
Chennai – 600007
Worship
Pr. LEO NELSON
Word
Bro. T. STEPHEN
044-24547999




47 நாள் 24 மணி நேர தொடர் சங்கிலி உபவாச நிறைவு ஜெபம்
அக்னி அற்புதத்தின்
கூட்டங்கள்–2021
இடம் : அக்னி அசெம்பிளி திருச்சபை.
நேரு நகர், வல்லம், திருப்போரூர் கூட்ரோடு, (அருகில்)
செங்கல்பட்டு.
நாள் & நேரம்
பிப்ரவரி
20 சனி
மாலை 6 மணி
21 ஞாயிறு
காலை 7 மணி
மாலை 6 மணி
தேவ செய்தி
சகோ T.ஸ்டீபன்
தொடர்புக்கு: பாஸ்டர். பியூலா சுதன்
போன் :9994116100 || 7402164569




GUDALUR, NILIGIRS DISTRICT
VIDUTHALAI PERINBA
PERUVIZHA - 2021
Message:
Bro. T. STEPHEN
Sis. T. JOSEPHIN STEPHEN
Worship:
Ps. BENJAMIN ISAAC
& TEAM
FEBRUARY
13,14
SATURDAY - SUNDAY
Evening 5.00 pm
to 8.00 pm
C.S.I. CSI NALMEETPAR CHURCH
GUDALUR TOWN, GUDALUR, NILGIRIS DISTRICT
Contact: A. BACKIARAJ, GUDALUR ALL NIGHT PRAYER FELLOWSHIP
6381758443 I 7598423854
God's Love

# தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்

## தினந்தோறும்

கீழ்காணும் டிவி சேனல்களின் மூலமாக நமது தேவனின் அன்பு ஊழியத்தின் மங்கள வார்த்தைகளை கேட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**நம்பிக்கை டிவியில் தினமும் இரவு 11.00 முதல் 11.30 வரை**

Satellite Channel - SCV 757, Airtel 817, Tata Sky 1592, Videocon 578, TCCL 743, Sun Direct 611, Polimer TV 726, Aadhar 879, Akshaya cable 606, Arasu Cable 600, Jio 4G Mobile Service Provider

**அதிசயம் டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை**

Tamilnadu - TCCL 737 | Kanyakumari - JAK 136 | Nagai & Theni - SCV 332 | Singapore Malasiya & Worldwide - BeeipTv 227 | USA, Canada & England - Starone IPTv 1426 Android smart TV

**ஹெவன் டிவியில் தினமும் காலை 8.00 முதல் 8.30 வரை**

Tamilnadu - TCCL 729, Polimer VK Digital 715 | Kanyakumari - SCV 214, AMN Digital Network 812

**ஷம்மா டிவியில் தினமும் காலை 10.00 முதல் 10.30 வரை மற்றும் இரவு 9.00 முதல் 9.30 வரை** Kanniyakumari Dist - SCV 223, VK Digital 223, TCCL 182

**ஜீசஸ் டிவியில் தினமும் காலை 8.30 முதல் 9.00 வரை**

Kanniyakumari - TCCL 181 | Airtel XStream Set top box

**கிராஸ் டிவியில் தினமும் காலை 9.30 முதல் 10.00 வரை**

Tamilnadu - TCCL 734

**நித்யம் டிவியில் தினமும் இரவு 9.30 முதல் 10.00 வரை**

Tamilnadu, Andhra, Karnataka, Singapore, Malasiya, Canada, USA, UK, Australia
TCCL 728 | Aadhar 528 | Apple 528 | Amn 728

**வாணி டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை மற்றும் இரவு 8.00 முதல் 8.30 வரை**

Tirunelveli & Tenkaasi - JAK Digital 120

**ஆல்மைட்டி டிவியில் தினமும் இரவு 7.00 முதல் 7.30 வரை** Chennai - Crystal 160



# வாரந்தோறும்

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறுதோறும்** | Angel TV<br>12.00 AM<br>12.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM / 8.00 AM \| 1.30 PM / 2.00 PM \| 8.30 PM / 9.00 PM \| 10.30 PM / 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| **திங்கள்தோறும்** | Angel TV<br>5.00 AM<br>5.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM / 8.00 AM \| 8.30 PM / 9.00 PM \| 10.30 PM / 11.00 PM \| 1.30 PM / 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur<br>CTN 801, VK Digital 117, Digcon 85, | நம்பிக்கை TELEVISION<br>7.30 AM<br>8.00 AM<br>Satellite Channel |
| **செவ்வாய்தோறும்** | Angel TV<br>5.00 AM / 5.30 AM \| 9.00 PM / 9.30 PM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM / 8.00 AM \| 8.30 PM / 9.00 PM \| 10.30 PM / 11.00 PM \| 1.30 PM / 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801,<br>VK Digital 117, Digcon 85, | |
| **புதன்தோறும்** | Angel TV<br>8.00 AM<br>8.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM / 8.00 AM \| 8.30 PM / 9.00 PM \| 10.30 PM / 11.00 PM \| 1.30 PM / 2.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| **வியாழன்தோறும்** | ஹெவன் HEAVEN TV INDIA<br>8.30 PM<br>9.00 PM<br>TamilNadu | Living Jesus Tv<br>7.30 AM / 8.00 AM \| 1.30 PM / 2.00 PM \| 8.30 PM / 9.00 PM \| 10.30 PM / 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur<br>CTN 801, VK Digital 117, Digcon 85, | SUBHAVAARTHA TELEVISION<br>7.30 AM<br>8.00 AM<br>Satellite Channel |
| **வெள்ளிதோறும்** | Angel TV<br>8.00 AM<br>8.30 AM<br>Satellite Channel | Living Jesus Tv<br>7.30 AM / 8.00 AM \| 1.30 PM / 2.00 PM \| 8.30 PM / 9.00 PM \| 10.30 PM / 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |
| **சனிதோறும்** | KING of GLORY<br>7.30 PM<br>8.00 PM<br>Pondicherry | Living Jesus Tv<br>7.30 AM / 8.00 AM \| 1.30 PM / 2.00 PM \| 8.30 PM / 9.00 PM \| 10.30 PM / 11.00 PM<br>Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85, | |

**ANGEL TV DETAILS ( Satellite Channel )**

**SUN DIRECT 610 | TATA Sky 1591 | SCV 260 | AIRTEL DTH 815**



# 2021
# தமிழ் காலண்டர்

2021-ஆம் ஆண்டின் அனுதின வாக்குத்தத்த வசனங்களுடன் எங்கள் ஊழியத்தின் அனைத்து நிகழ்வுகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி விபரங்கள் அடங்கிய தமிழ் காலண்டர் உங்களுக்காக தயாராக இருக்கிறது.

எங்களது சென்னை, மும்பை மற்றும் நாகர்கோவில் கிளை **அலுவலகங்களில் / ஜெப கோபுரங்களில் நேரடியாக சென்று பெற்றுக்கொள்ளலாம்**

**கைபேசி** மற்றும் **தொலைபேசி, வாட்ஸ்அப்** மூலம் ஆர்டர் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் கைபேசி எண்கள்:
**97107 44999 / 98410 40999**

**கடிதம்** மற்றும் **மின்னஞ்சல்**(Email) மூலம் தெரியப்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
**Prayer@godsloveministries.co.in**

**ஆன்லைன்** மூலமும் ஆர்டர் செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் இணையதள முகவரி: **www.godsloveministries.co.in**

**வெளிநாடு**
ஒரு காலண்டர்
**$2 USD**
தபால் செலவு தனி*

**இந்தியா**
நேரில் / தபாலில்
நன்கொடை
**₹100/-**

**மணியார்டர்** "தேவனின் அன்பு ஊழியங்கள்" சென்னை முகவரிக்கு அனுப்பி, பெற்றுக் கொள்ளலாம் (காலண்டர் நன்கொடை என்று மணியார்டரில் குறிப்பிடவும்)



சென்னை / 044-24547999
நாகர்கோவில் / 9884480999
மும்பை / 9930737999

எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை - 600 041
பாக்கியம் திருமண மண்டப வளாகம், எண்: 177, WCC ரோடு, YWCA எதிர்புறம், நாகர்கோவில் - 629 001
எண்.L-411, டிரீம்ஸ்-தி-மால், எல்.பி.எஸ். மார்க், சாகர் விகார் அருகில், பாண்டுப் மேற்கு, மும்பை - 400 078

# எங்கள் சேவைகள்




## 24X7 மணி நேர ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்க, நீங்கள் எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் எங்களை அழைக்கலாம். எங்கள் ஜெப வீரர்கள் 24 மணி நேரமும் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

**044 2454 7999**
**99419 50999**

## மின்னஞ்சல் ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளை சகோ. T.ஸ்டீபன் அவர்களுக்கு அனுப்பி, ஆண்டவரிடமிருந்து பதில்களைப் பெற:

prayer@godsloveministries.co.in

**சமூக வலைத்தளம்:**

**Evg.T.Stephen**

**9841040999**


Owned, Edited and Published by **Sis.Josephin Stephen**

**தேவனின் அன்பு ஊழியங்கள்**

எண்.14, ராமலிங்க நகர் OMR ரோடு,
SRP டூல்ஸ் அருகில் கொட்டிவாக்கம், சென்னை – 600 041
தொலைபேசி: +91 44 2454 7999 / 99419 50999
prayer@godsloveministries.co.in www.godsloveministries.co.in